**சென்னை மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணைகள்**
**பிறப்பிப்பவர்:- திரு. ஏ.ஆர்.ஏ. ஜெயராஜ், எம்.ஏ., பி.ஜி.எல்., எம்.பி.ஏ.,**

---

**செ.மு.ஆணை எண்.அ2/34308/2019,** **நாள்:- 08.04.2022**

பொருள்:- பணியமைப்பு – சென்னை மாவட்ட வருவாய் அலகு – முன்னாள் காஞ்சிபுரம் மாவட்டம் - கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி பணியிடை மரணமடைந்த திரு. A. முத்துசாமி என்பவரின் மகன் திரு. M. கிருபா சங்கர் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டது – பணி வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

படிக்கப்பட்டது:-
1. காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.அ4/30287/2014, நாள்:- 04.05.2018
2. அரசாணை (நிலை) எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)த்துறை, நாள்:- 02.03.2016
3. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)த்துறை, நாள்:- 26.02.2021

*_*_*_*_*

**ஆணை:-**

பார்வை-1ல் படிக்கப்பட்ட செயல்முறை ஆணையில், காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் வட்டம், திருநிலை கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி பணியிடை 04.11.2014 அன்று மரணமடைந்த திரு. A. முத்துசாமி என்பவரின் மகன் திரு. M. கிருபா சங்கர் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டதை தொடர்ந்து தனியர் 21.05.2018 முற்பகல் முதல் சோழிங்கநல்லூர் வட்டத்தில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வருகின்றார். மேலும், சென்னை மாவட்ட அலகு விரிவாக்கம், சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சோழிங்கநல்லூர் பகுதிகளை காஞ்சிபுரம் மாவட்டத்திலிருந்து சென்னை மாவட்த்தில் இணைக்க உத்தரவிடப்பட்டதன் அடிப்படையில் தனியர் சென்னை மாவட்டத்தில் இளநிலை வருவாய் ஆய்வாளராக 16.08.2018 முற்பகல் பணியில் இணைந்துள்ளார்.

மேலும், பார்வை-2 மற்றும் 3-ல் படிக்கப்பட்ட அரசாணைகளில் உத்தரவிட்டுள்ளவாறு, தனியர் திரு. M. கிருபா சங்கர், இளநிலை வருவாய் ஆய்வாளர், என்பவர் சமர்ப்பித்த ஆவணங்களை பரிசீலனை செய்ததில் விதித்தளர்வு அளிக்க கூடிய இனங்கள் ஏதுமில்லை என்ற அடிப்படையில் தனியர்

பணியில் சேர்ந்த நாளான 21.05.2018 முற்பகல் பணி வரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது. பணி வரன்முறை செய்யப்பட்ட விவரத்தினை தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ள சோழிங்கநல்லூர் வட்டாட்சியருக்கு உத்தரவிடப்படுகிறது.

ஒம்/- ஏ.ஆர்.ஏ. ஜெயராஜ்,
மாவட்ட வருவாய் அலுவலர்,
சென்னை மாவட்டம்.

/ஆணைப்படி/ உதவி சிரஸ்ததார் (பொது)

பெறுநர்
திரு. M. கிருபா சங்கர்,
இளநிலை வருவாய் ஆய்வாளர்,
சோழிங்கநல்லூர் வட்டம், சென்னை.

நகல்:-

1. வருவாய் கோட்டாட்சியர், தென் சென்னை கோட்டம்
2. வட்டாட்சியர், சோழிங்கநல்லூர் வட்டம், சென்னை
3. இருப்புக் கோப்பு